<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

OS 06/2024

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 11.08.2025

Pw1 (சிவசுப்பிரமணியம் )

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)</u>

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். வழக்கில் சொல்லியுள்ள முகவரி பாண்டியம்பாளையம் கிராமம் ஆகும். பிரதிவாதி எனக்கு 10 ஆண்டுகளாக அறிமுகமானவர். பிரதிவாதி விவசாய உபகரணங்கள் தொடர்பான கொல்லு பட்டறை வைத்துள்ளார். அவருக்கு விவசாய பூமி உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு என்ன அவரச தேவை என்பதை நான் விசாரித்து தெரிந்து கொள்ளவில்லை. நான் பணம் கொடுப்பதற்கு 20 நாட்கள் முன்பு என்னிடம் பணம் கேட்டார். நான் பிரதிவாதிக்கு கொடுத்த பணம் என்னிடம் இருந்தது என்பதை காட்டுவதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் வங்கி கணக்குப் பட்டியல் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் எனது மனைவிக்கும் கூட்டுக் கணக்கு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள வங்கி கணக்குப் பட்டியல் அடிப்படையில் எச்டிஎப்சி வங்கி மூலம் எனது கணக்கில் ரூ.3,00,000/- வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரி.எனக்கு 3 லட்சம் எனது கணக்கில் யார் செலுத்தினார்கள் என்றால் அது பற்றி ஞாபகமில்லை. நான் பிரதிவாதிக்கு ரூ.5,00,000/- பணம் ரொக்கமாக கொடுத்தேனா அல்லது வங்கி ஆவணங்கள மூலம் கொடுததேனா என்று வழக்கில் குறிப்பிடவில்லை என்றால ஆமாம், ரொக்கமாக தான் கொடுத்தேன். பிரதிவாதி கடனுறுதி சீட்டை எழுதி கொடுத்தார் என நான்அறிவிப்பிலோ, வழக்கிலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டை ஒரு அருண்குமார் எழுதியதாக எனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். அருண்குமார் எனக்கு 8-9 ஆண்டுகளாக

பழக்கம். மற்றொரு சாட்சியான பழனிசாமி எனக்கு 15 ஆண்டு பழக்கம். நாங்கள் மூவரும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரி. பிரதிவாதி என் சமூகத்தை சார்ந்தவர் அல்ல. கடனுறுதி சீட்டை என் வீட்டில் எழுதப்பட்டது என்பதை கடனுறுதி சீட்டு மற்றும் முத்திரையை பிரதிவாதி கொண்டு வந்ததாக எனதுஅறிவிப்பு மற்றும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதிலுள்ள வாசகத்தை பிரதிவாதி சொன்னதாக எனது அறிவிப்பிலும் வழக்குரையிலும சொல்லவில்லை என்றால் சரி. கடனுறுதி சீட்டில் உள்ள ரேகை யாருடையது என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை பிரதிவாதியுடையது என குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால சரிதான். ஈரோடு கொல்லம்பாளையம் திருவிக காலனி கதவிலக்கம் 68/46 ஐ சார்ந்த சி எஸ் பழனிசாமி என்பவரை எனக்கு தெரியும், அவர் 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்த விட்டார். அவர் குடும்பத்தாருடன் எனக்கு பழக்கம் இல்லை, அவர்கள் எனக்கு உறவினர்தான். 15 ஆண்டுகளாக அவர் குடும்பத்தாருடன் பழக்கம் இல்லை. அருண்குமாருக்கும் சிஎஸ் பழனிசாமிக்கும் தொடர்பு உள்ளதா என்று தெரியாது. எனக்கும் அருண்குமாருக்கும் ஒரே புல எண்ணில் சொத்துக்கள் இருந்ததா என்றால் இல்லை. சி எஸ் பழனிசாமியின் மனைவி கோமதியம்மாளுக்கு 2022 ம் ஆண்டு நான் ஒரு சொத்தை விற்பனை செய்துள்ளேன் என்றால் ஆமாம், அந்த சொத்தை தரகர் மூலம் விற்பனை செய்தேன். என்னிடம் காட்டப்படுவது மேற்படி சொத்தின் கிரய ஆவணம் என்றால் ஆமாம். அந்த கிரய ஆவணம் **பிசாஆ 1.** அந்த கிரய ஆவணத்தில் சிஎஸ் பழனிசாமியின் மகனும் எனது மனைவியும் சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் சிஎஸ் பழனிசாமி குடும்பத்தினருக்கும் பெருந்துறை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குகள் நடந்த வந்ததா என்றால் தெரியாது. அந்த வழக்கு விசாரணையின்போது சிஎஸ் பழனிசாமியின் மகனுடன் நான் தொடர்ந்து நீதிமன்றதிற்கு வந்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீட்டை ஒட்டி உள்ள தார் சாலையை அகலப்படுத்தற்காக அவரின் வீட்டை ஊர் மக்கள் கேட்டு வந்த அதை பிரதிவாதி மறுத்தவிவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 09.08.2020 அன்று அருண்குமார் மற்றும் ஊர்

மக்கள் பிரதவாதியின் வீட்டின் சுற்றுச் சுவரை இடித்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் சாட்சி முதலில் ஆமாம் என்றும் பின்னர் தெரியாது என்றும் கூறுகிறார். ஊர் காரர்கள் ஒருபுறமும் பிரதிவாதி மற்றொரு புறமும் பிரதவாதிக்கு ஊர் மக்களுடன் எவ்வித தொடர்பும் இல்லாமல் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. சிஎஸ் பழனிசாமியின் குடும்பத்தார் தான் எனது வங்கி கணக்கில் தொகை ரூ 3,00,000/-த்தை செலுத்தியுள்ளார்கள் என்றால் தெரியாது. முன் விரோதத்தை காரணமாக எடுத்துக்கொண்டு சி எஸ் பழனிசாமியின் குடும்பத்தாரும் ஊர் மக்களும் சேர்ந்து மோசடியான ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞரின் விலாசம் தெரியுமா என்றால் அவர் டீச்சர்ஸ் காலனியில் உள்ளார், முழு விலாசம் தெரியாது. பிரதிவாதியின் விலாசம் குறித்த ஆவணங்கள் என்னிடம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதியின் தகப்பனார் உயிருடன் உள்ளாரா என்றால் தெரியாது. பிரதிவாதியின் இரு மகன்களும் நல்ல படித்து வேலை மற்றும் வருமானத்தில் உள்ளனர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் குடும்ப செலவிற்கான பிரதிவாதி பணம் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் ஈரோட்டில் உள்ள வீட்டில் வைத்து கடனுறுதி சீட்டு நிறைவேற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. நான் அறிவிப்பு கொடுத்த தேதியில் பிரதிவாதி எனக்கு எவ்வளவு வட்டி பாக்கி கொடுக்க வேண்டும் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் அதற்கு கணக்கு போட்டால் தான் தெரியும். இந்த வழக்கிற்கு எவ்வளவு நீதிமன்ற கட்டணம் செலுத்தினேன் என்று எனக்கு தெரியாது. நான் சொன்ன தேதியில் பிரதிவாதி என்னிடமிருந்து ரூ.5,00,000/-கடன் பெற்றுக் கொண்டு சாட்சிகள் முன்னிலையில் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள விவரங்கள் என்னாலும், சிஎஸ் பழனிசாமி குடும்பத்தினராலும் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. சிஎஸ் பழனிசாமி குடும்பத்தாரை நான் சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் அவர்களுடன் எனக்கு போக்குவரத்து இல்லை என்பதால் விசாரிக்கவில்லை. 2022 ம் ஆண்டு எனது சொத்தை அவர்களது குடும்பத்தினருக்கு விற்பனை செய்துள்ளேன் என்றும் எனக்கு சிஎஸ் பழனிசாமி

குடும்பத்தாருடன் பழக்கம் உள்ளது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால சரியல்ல. இந்த வழக்கை சிளஸ் பழனிசாமி குடும்பத்தினர் தான் நடத்தி வருகின்றனர் என்றும் நான் நடத்தவில்லை என்றால் சரியல்ல. சிளஸ் பழனிசாமி குடும்பத்தினரை விசாரித்தால் உண்மை தெரிந்து விடும் என்பதால் அவர்களுடன் பழக்கம் இல்லை என்று பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.08.11 16:36:49 +0530

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS